# தமிழ்நாடு முழுவதும் முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா: திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை! நலத்திட்ட உதவிகள் வழங்கல்!



முத்தமிழறிஞர் செம்மொழி நாயகர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை செண்பக இல்லத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தி தமிழுக்கு பெருமை சேர்த்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் மலர் தூவி மரியாதை செலுத்தி வணங்கினார்



நவீன தமிழகத்தின் தந்தை கலைஞர் அவர்களின் 102 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சண்முகபுரம் பகுதி சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மதிய உணவை சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் வழங்கினார். உடன் மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகர செயலாளர் ஆனந்தசேகரன்,பகுதி செயலாளர் சுரேஷ்குமார், மாவட்ட பிரதிநிதிகள் ராஜ்குமார், அனல் சக்திவேல், மாமன்ற உறுப்பினர் சரண்யா, வட்டச் செயலாளர் பொன்ராஜ், பகுதி துணைச் செயலாளர் ஜெய்சிங், மாவட்ட மருத்துவரணி தலைவர் அருண்குமார், பகுதி இளைஞரணி அமைப்பாளர் சூர்யா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த தினத்தை செம்மொழி நாளாக கொண்டாடுமாறு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்ததை தொடர்ந்து மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக வண்டியூர் ரிங் ரோடு டோல்கேட் அருகே அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலைக்கு வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் முன்னிலையில் மாலை அணிவித்து இனிப்புகள் மற்றும் உணவு வழங்கினார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன் எம் எல் ஏ, எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், கரு தியாகராஜன், தன செல்வம், வடிவேல் முருகன், ஏர்போர்ட் பாண்டியன், அன்பழகன், காவேரி, சுதன், மதி வெங்கடேஷ், சோமசுந்தர பாண்டியன், வக்கீல் ஆர்.பாலாஜி, சிவனாண்டி, வக்கில் கலாநிதி, நேருபாண்டியன், முத்துராமலிங்கம், வீர கணேசன், சம்மட்டிபுரம் கணேசன், ஆசைக்கண்ணன், ரோகினி பொம்மதேவன், இளங்கோ, விமல், வாசுகி சசிக்குமார், சுவிதா விமல், ஸ்ரீதர், அ.பா.ரகுபதி, சிறைச்செல்வன், மதன்குமார், கிருஷ்ணா பாண்டியன், பொதும்பு தனசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.





ஜூன் 3, முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு சைதை மேற்கு பகுதி திமுக சார்பில் பகுதி கழக அலுவலகத்தில் பகுதி செயலாளரும், பத்தாவது மண்டலக்குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி ஏற்பாட்டில் சிறுவர், சிறுமியர்களுக்கு பாடநூல்கள், கல்வி உபகரணங்கள் வழங்கி மற்றும் 1000 பேருக்கு அசைவ உணவை சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் வழங்கினார். உடன் பொதுக்குழு உறுப்பினர் களக்காடிஎல்லப்பன், பகுதி துணைச்செயலாளர் ஆர்.ரமேஷ், பகுதி பொருளாளர் வி.பி. ஜானகிராமன், மாவட்ட பிரதிநிதிகள் டி.என்.சிவமணி, ஆர்.எல்.காந்தன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர். கிருஷ்ணகுமார், கோட்டூர்பிரகாஷ் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞரின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் தலைமையில் திமுக நிர்வாகிகள் செஞ்சி கூட்ரோட்டில் இருந்து அமைதி ஊர்வலம் சென்று அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.மலர் தூவி மரியாதை செலுத்தி 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், வல்லம் ஒன்றை பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் உள்ளனர்.



நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு திமுக தலைமை நிலைய செயலாளர்கள் பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா ஆகியோர் 117வட்டக் கழகம் சார்பாக பொதுமக்களுக்கு பழச்சாறு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர். வட்டச் செயலாளர் தவமணி நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்தார்.




முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் அரசு பிளீடர் பா.திலக்குமார் அவர்களின் தலைமையில் தலைவர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்தும், புகழ் வணக்கம் செய்தும்,இனிப்புகள் வழங்கப்பட்டது.அதனைத் தொடர்ந்து மதியம் 1.30 மணியளவில் எம்.பி.ஏ. வழக்கறிஞர் சங்கத்தில் இளம் வழக்கறிஞர்களுக்கு சட்ட புத்தகம் வழங்கி பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. அது சமயம் கழக அரசு வழக்கறிஞர்கள் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர் உடன் கழக மூத்த வழக்கறிஞர்கள் திரளாக கழக கலந்து கொண்டனர்.



கேரள மாநில தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் கேரள மாநிலம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. தலைநகர் திருவனந்தபுரத்தில் உள்ள தலைமைச் செயலகம் அருகில் கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் கேக் வெட்டி அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் திருவனந்தபுரம் மாநகராட்சி சேர் பர்சன் அம்சு வாமதேவன், திருவனந்தபுரம் மாவட்ட கழக செயலாளர் அனீஷ், கேரள மாநில திமுக இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், துணை அமைப்பாளர்கள் விபின், முருகேசன், ஹரிகுமார், கபிலன், சந்திரமோகன், துரை, பேச்சிமுத்து, அருள் ஜோதி, அருண் மற்றும் திருவனந்தபுரம் மாவட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.